# ஒன்பதாம் வகுப்பு – தமிழ்
# மெல்ல மலரும் மாணவர்களுக்கான கற்றல் கையேடு – 2021-22

ஆக்கம்
ச.சேட்டு மதார்சா
தமிழாசிரியர்
ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு.அலைபேசி–8883681115

## பொருளடக்கம்

இயல் –1

இயல்–2

இயல்–3

இயல்–4

இயல்–5

இயல்–6

இயல்–7

இயல்–8

இயல்–9

விரிவானம்

கட்டுரை,கடிதம், அறிக்கைகள்

Padasalai.Org
ச.சேட்டு மதார்சா



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

## இயல்-1

**உரைநடை உலகம்: திராவிட மொழிக் குடும்பம்**

### குறு வினா விடை:

**1.நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

தமிழ் மொழி. திராவிட மொழிகள் வகையைச் சேர்ந்தது.

### சிறு வினா விடை:

**1.திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

தென் திராவிட மொழிகள்,வட திராவிட மொழிகள் , நடுத் திராவிட மொழிகள் ஆகியன திராவிட மொழிகள் பிரிவாகும்.

**எனக்குத் தெரிந்த மொழி : தமிழ்**

**அதன் சிறப்புகள் :** பழமையான இலக்கண-இலக்கியம் உடையது தமிழ். "ழ" என்னும் சிறப்பெழுத்தைக் கொண்டது.கூட்டெழுத்துகள் இல்லாத மொழி தமிழ் மொழி.

**2.மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிடமொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

| | |
|---|---|
| மூணு - மலையாளம், | மூடு - தெலுங்கு, |
| மூரு - கன்னடம், | மூஜி -துளு. |

### நெடு வினா விடை:

**1.திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

சான்று:

கண் - தமிழ் , கண்ணு - மலையாளம், கன்னடம், கன்னு - தெலுங்கு , குடகு. ∴கன்-குரூக்.

திராவிடமொழிகளின் சொற்கள் பொதுவான அடிச்சொற்களைக் கொண்டுள்ளது.

சான்று:

மூன்று - தமிழ் , மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி -துளு.

திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன.

மேற்கண்ட சான்றுகளில் உள்ள சொற்கள் காலப் பழமையான தமிழ் மொழியில் தான் முதலில் இடம்பெற்றுள்ளதைப் பார்க்கும் போது, திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை அறியலாம்.

**கவிதைப் பேழை: தமிழோவியம்**

### குறுவினா விடை

**1.தமிழோவியம் கவிதையில் உங்களைக் கவர்ந்த அடிகள் குறித்து எழுதுக.**

"எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்

ஏந்தி வளர்த்தது தாயெனவே" என்ற அடி என்னைக் கவர்ந்த அடிகளாகும். இந்து, கிறித்துவம், இஸ்லாம் ஆகிய பல சமயங்களைத் தாயென வளர்த்தது தமிழே! என்பதை இத்தொடர் வழி அறியலாம்.

**2. அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?**

அகப்பொருள் , புறப்பொருள்

**3.உலகத்தாய்மொழி நாள் எது?** பிப்ரவரி 21

**4.தமிழை ஆட்சிமொழியாகக் கொண்ட நாடுகள் எவை?**
இலங்கை , சிங்கப்பூர்

### சிறு வினா விடை

**1.காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக்கொள்கின்றது?**

அறிவியலால் இன்று பல துறைகள் வளர்ந்து வருகின்றன.சான்றாக"ஆக்ஸிஜன்" என்ற சொல்லிற்கு "உயிர்வளி"என்ற புதிய சொல்லாக்கத்தைத் தமிழில் உருவாக்க முடிகின்றது. இவ்வாறு காலந்தோறும் தமிழ்மொழி தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றது.

**2.புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்களிப்பை விளக்குக.**

1.இன்றைய தேவைக்கான புதிய தமிழ்ச்சொற்களைச் சங்க இலக்கியங்கள் வழி வெளிக்கொணர்வோம்.
2.கணினித் தமிழ்ச்சொற்களை ஆக்குவோம்.
3.தனித்தமிழ்ச் சொற்களைப் பெருகச் செய்வோம்.



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

## கவிதைப் பேழை: தமிழ்விடு தூது

### குறுவினா விடை

**1.கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

இரண்டு இரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலை கண்ணி. இரண்டு இரண்டு அடிகளை வைத்து எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் கண்ணி ஆகும்.

### நெடு வினா விடை

**1.தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

முத்திக் கனியே! முத்தமிழே! உன்னோடு மகிழ்ந்து சொல்லும் விண்ணப்பம் உண்டு. கேள்.புலவர்கள் குறம் , பள்ளு பாடி தமிழிடமிருந்து சிறப்பு பெறுகின்றனர். அதனால் உனக்கும் பாவகைக்கும் உறவு உண்டா?

சிந்தாமணியாய் இருந்த உன்னைச் சிந்து என்று அழைப்பவர் நா இற்று விழும்.தேவர்கள்கூட மூன்று குணங்கள். ஆனால் தமிழே! நீ மட்டுமே பத்து குணங்களைப் பெற்றுள்ளாய்!

வண்ணங்கள் கூட ஐந்து தான். ஆனால் தமிழே! நீ மட்டுமே 100 வண்ணங்களைப் பெற்றுள்ளாய்!

உணவின் சுவையோ ஆறு. ஆனால், தமிழே ! நீயோ ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்! மற்றையோர்க்கு அழகு ஒன்று தான் , ஆனால், தமிழே ! நீயோ 8 வகையான அழகினைப் பெற்றுள்ளாய்!

### கற்கண்டு : தொடர் இலக்கணம்.

**1.செய் வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணை வினைகள் இரண்டினை எழுதுக.**

**1.உண் - சான்று : கோவலன் கொலையுண்டான் ,**
**2.ஆயிற்று - சான்று :** வீடு கட்டியாயிற்று.

**2.வீணையோடு வந்தாள் , கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.**

வேற்றுமைத்தொடர் , விளித் தொடர்.

### சிறு வினா விடை

**4.தன்வினை , பிறவினை** எடுத்துக்காட்டுகளுடன் **வேறுபடுத்தி காட்டுக.**

**தன்வினை:** வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை. எ.கா:அப்துல் வந்தான்

**பிறவினை:**

வினையின் பயன் எழுவாயை யன்றி பிறிதொன்றைச் சேருமாயின் அது பிறவினை. எ.கா.அப்துல் வருவித்தான்

## இயல் -2

### பெரியபுராணம்

### குறுவினா

1.நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

எருமைகள் நீரில் விழுவதால் நீரில் உள்ள வாளை மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும் காட்சிக்கு ஒப்பிடுகிறது.

### நெடு வினா விடை

பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

- வண்டுகள் மொய்க்கும் பூக்களோடு காவிரி நீர் வாய்க்கால்களின் பாய்கிறது.
- கரும்புகள் ,குவளை மலர்கள், சங்குகள் , அன்னங்கள் அனைத்தும் நீர்நிலைகளில் காணப்படுகிறது.
- மீன்கள் , முத்துக்கள் ,மலர்கள் ஆகியவை திருநாட்டில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

### புறநானூறு

### குறுவினா வினாவிடை

1.”உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்”பொருள் விளக்கம் தருக.

உணவைத் தந்தவர் உயிரைத் தந்தவர்.

### சிறு வினா–விடை

நிலைத்த புகழ் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

- உணவைத் தந்தவர். உயிரை தந்தவர்
- உணவு என்பது நீரையும் நிலத்தையும் சார்ந்தது.
- குழியான நிலம் உள்ள இடங்களில் எல்லாம் நீரைப் பெருகச் செய்ய வேண்டும்.

## இயல் – 3

### ஏறுதழுவுதல்

1.ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

1.ஏறுகோள் 2.எருதுகட்டி



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

2.ஏறுதழுவுதல் குறித்து தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.

சேலம் ,கரிக்கையூர், கல்லூத்து மேட்டுப்பட்டி சித்திரக் கல் புடவு.

சிறுவினா விடை

1.வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

ஏறுதழுவுதல் முல்லை மக்களின் அடையாளம்.

உழவுத் தொழிலுக்கும் போக்குவரத்திற்கும் ஏறு பயன்பட்டது.

2. ஏறுதழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்துள்ளது?

- ❖ முல்லை – ஏறுதழுவுதல்
- ❖ மருதம் – உழவுக்கு மாடுகள் பயன்படுதல்
- ❖ பாலை – போக்குவரத்துக்கு மாடுகள்.

நெடு வினா விடை

1. ஏறுதழுவுதல் தமிழரின் அரசியல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விளக்குக.

- ❖ காளைச் சண்டை ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு.
- ❖ அங்கு காலையைக் கொல்பவன் வீரன்.
- ❖ ஆனால் தமிழ்நாட்டில் காளைகளுக்கு எந்தத் தீங்கையும் ஏற்படுத்தக்கூடாது.
- ❖ வெற்றிபெற்ற காளைக்கும் பரிசளிப்பு செய்வர்.

2. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

- ✓ விலங்குகளை முன்னிலைப் படுத்தவும் நம் முன்னோர்கள் ஏறுதழுவுதலைப் பண்பாட்டுக் கூறாகக் கொண்டிருந்தனர்.
- ✓ நாகரிகம் என்ற பெயரில் நாம் அதனை ஒதுக்காமல் அந்நிகழ்வுகளைச் செய்தல் வேண்டும்.
- ✓ ஏறுதழுவுதல் பற்றி நம் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

மணிமேகலை

1.'பழ மணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

இடம்

மணிமேகலையில் முரசு கொட்டியவன் கூறியது.

விளக்கம்

அனைத்து இடங்களிலும் பழைய மணலை மாற்றி புது மணலைப் பரப்புங்கள்.

2.பட்டிமண்டபம் –பட்டிமன்றம் இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.

இரண்டும் ஒன்றே! பட்டிமண்டபம் என்பது காலப்போக்கில் பட்டிமன்றம் என மாறியது.

3.ஐம்பெரும் குழுக்களில் உள்ளவர் யாவர்?

1.அமைச்சர் 2.சடங்கு செய்விப்போர் 3.படைத்தலைவர் 4.தூதர் 5.ஒற்றர்

சிறுவினா விடை

3.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

தெருக்களை சுத்தப்படுத்தி ,சுவர்களில் சுண்ணாம்பு அடித்து ,தோரணம் கட்டி கோலம் போட்டனர். இதைப்போல தெருக்கள், மன்றங்கள் ஆகியவற்றில் இந்திர விழாவின் போது அழகுபடுத்தினர். திருவிழாவில் பாட்டுக் கச்சேரி நடக்கும். இந்திர விழாவில் பட்டி மண்டபம் நடக்கும்.

வல்லினம் மிகும்இடங்கள்

1.வல்லினம் மிகுதல் என்றால் என்ன?

க,ச,த,ப என்பது சொல்லின் முதலில் வரும். இவை நிலை மொழியுடன் சேரும்போது மெய்யெழுத்துகள் தோன்றி சேரும். இதனை வல்லினம் மிகுதல் என்பர்.

சிறு வினா விடை

தற்கால தமிழ் உரைநடையில் வல்லினம் மிகும் இடங்களைக் குறிப்பிடுக.

- ❖ அ ,இ என்ற சுட்டு எழுத்திலும் ,
- ❖ அந்த இந்த என்ற சுட்டுப் பெயரிலும் வல்லினம் மிகும்

சான்று : அச்சட்டை , இந்தக் கொடி

அகழாய்வுகள்

1.தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும் ஏன்?

தமிழரின் பழமையை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும்.



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

திருக்குறள்

1.நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

நம்மை இகழ்பவரிடம் நிலம் போலப் பொறுமை காக்க வேண்டும்.

2.தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும்.– இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.

தீயவை தீயவையே தரும். அதனால் அவற்றை செய்ய அஞ்ச வேண்டும்.

3.ஒற்றொற்றி.... இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக

மோனை: ஒற்றொற்றி–ஒற்றினால் –ஒற்றிக்

எதுகை: ஒற்றொற்றி–ஒற்றினால் –ஒற்றிக்

4.கனவிலும் இனிக்காது எவர் நட்பு?

சொல்லும் செயலும் வேறு வேறு உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

இயல் – 4

ஓ என் சமகாலத்தோழர்களே!

1.கூட்டுப் புழுவை எடுத்து காட்டி கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக. (குறுவினா)

பொறுமை , அடக்கம்

2. “ஓ! என் சமகாலத் தோழர்களே!” கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?(சிறுவினா)

- அறிவியல் வாகனத்தில் தமிழை ஏற்ற வேண்டும்.
- கரிகாலன் புகழை கணினியில் கொண்டு வரவேண்டும்.
- ஏவுகணைகளில் தமிழை எழுதி அனைத்து கோள்களிலும் ஏற்ற வேண்டும்.

உயிர்வகை

1.மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே இவற்றில் தொல்காப்பியர் குறிப்பிடும் மூவறிவு, நான்கறிவு , ஐந்தறிவு உயிர்கள் யாவை? (குறுவினா)

3 அறிவு –கரையான்,எறும்பு

4.அறிவு –வண்டு,தும்பி

5 அறிவு –பறவை ,விலங்கு

2.அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்? (சிறுவினா)

- தொடு உணர்வால் அறிவது ஓரறிவு உயிர்கள்.
- தொடுதல் – சுவை அறிவது. ஈரறிவு உயிர்கள்.
- தொடு உணர்வு –சுவை –முகர்தல் அறிவது மூவறிவு உயிகள்.
- இவற்றோடு காணுதல் நான்கறிவு உயிர்கள்.
- இவற்றோடு ஐந்தறிவு உயிர்கள்.
- இவற்றோடு மனதால் அறிவது ஆறறிவு உயிர்கள்.

விண்ணையும் சாடுவோம்

1.செயற்கைக் கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியை பற்றி திரு. சிவன் கூறுவது யாது?குறுவினா

- சித்தாரா செயலி
- வானிலையின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.

2.மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைகோளின் பங்கு யாது?(சிறுவினா)

1.விளைச்சல் கண்டறிதல்

2.நீரின் அளவு கண்டறிதல்

3.மீன்கள் கிடைக்கும் இடத்தை சொல்லுதல்
4.திறன்பேசி

– ஆகியவற்றிற்கும் செயற்கைக்கோள் பயன்படுகிறது.

வல்லினம் மிகா இடங்கள்

தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களைக் கூறுக

- அது – இது என்னும் சொல்லில் வல்லினம் மிகாது.
- எது– எவை என்னும் சொல்லில் வல்லினம் மிகாது.

இயல்- 5

## கல்வியில் சிறந்த பெண்கள

**குறு வினா விடை**

1.சாரதா சட்டம் எதற்காக போடப்பட்டது?

குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்காக இச் சட்டம் போடப்பட்டது

**சிறு வினா விடை**

1. சங்கப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

அவ்வையார் ,ஆதிமந்தியார், பொன்முடியார் , வெள்ளிவீதியார்.



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

2. இன்றைய பெண் கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.

தந்தனத்தோம் என்று சொல்லியே!
வில்லினில் பாட! ஆமாம் வில்லினில் பாட!
படிக்க வைப்போம் !பெண்களைப் படிக்க வைப்போம்!
பெண்கல்வி வாழ்க! பெண்கல்வி!

3. மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளை குறிப்பிடுக.

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
- அடையாறில் அவ்வைஇல்லம்,புற்றுநோய் மருத்துவமனை நிறுவினார.
- பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டத்திற்குப் பாடுபட்டார்.

4.நீலாம்பிகை அம்மையார் தமிழ் பணி குறித்து எழுதுக.

தனித்தமிழ் கட்டுரை ,வடசொல் தமிழ் அகராதி ,முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார்பாராட்டிய மூவர் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

நெடு வினா விடை

1. நீங்கள் அறிந்த சாதனை பெண்கள் குறித்த செய்திகளை எழுதுக

மருத்துவர் முத்துலட்சுமி

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.அடையாறில் அவ்வை இல்லம் ,புற்றுநோய் மருத்துவமனை நிறுவினார

நீலாம்பிகை அம்மையார்

தனித்தமிழ் கட்டுரை ,வடசொல் தமிழ் அகராதி ,முப்பெண்மணிகள் வரலாறு,பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

## குடும்ப விளக்கு

குறு வினா விடை

1.தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?

பெண் கல்வி

**சிறு வினா விடை**

1. சமைப்பது தாழ்வா இன்பம் சமைக்கின்ற சமையல் செய்வார்.

1.இன்பம் சமைப்பவர் யார்? உணவைச் சமைப்பவர்

2.பாவேந்தர் கூற்றுபடி சமைப்பது தாழ்வா? இல்லை

**நெடு வினா விடை**

**1.குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண் கல்விக்கான கருத்துக்களை இன்றைய சூழலில் ஒப்பிடுக.**

கல்வியறிவில்லாத பெண்கள் பயன்படாத நிலம் போன்றவர்கள். கல்வியறிவு இல்லாத பெண்களின் குழந்தைகள் தீய பழக்கங்கள் செய்கின்றனர்.

கல்வி அறிவுள்ள பெண்கள் நல்ல நிலத்தை போன்றவர்கள். இன்று கல்வி கற்ற பெண்களின் குழந்தைகள் பலர் நல்ல பழக்கங்களை கற்று உயர்ந்து இருக்கின்றனர்.

## வீட்டிற்கோர் புத்தகசாலை

குறு வினா விடை

1.நீங்கள் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?

1.திருக்குறள் 2.மணிமேகலை

2.அண்ணாவின் புகழ் பெற்ற பொன்மொழிகள் உனக்கு பிடித்தமான பற்றி எழுதுக.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

## இடைச்சொல்,உரிச்சொல்

1.தான் என்னும் இடைச்சொல்லை எப்படி எல்லாம் பயன்படுத்தலாம்?

அழுத்தப் பொருளில் பயன்படுத்தலாம்.

சான்று – நிர்மலா தான் பாடினாள்

2.செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம் பெறுகின்றன?

1. ஒரு சொல் பல பொருள் 2.பல சொல் ஒரு பொருள்

## இயல்-6

## இராவண காவியம்

குறு வினா விடை

1.பாலை நிலத்தில் பருந்துகள் பறந்த தன் காரணம் என்ன?

குழந்தைகள் பாலைக் காயைப் போட்டு அடிக்கும் சத்தம் கேட்டு பருந்துகள் பறந்தது.

2. இடிகுரல், பெருங்கடல் இலக்கணக் குறிப்பு தருக.

இடிகுரல் – உவமைத்தொகை
பெருங்கடல் –பண்புத்தொகை

**சிறுவினா விடை**

**1.இராவண காவியத்தில் இடம் பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டுக.**

1.பாலைக்காய் வெடிப்பதைக்கேட்டு பறவைகள் பயந்து ஓடுகின்றன.

2.தும்பி கடற்கரையில் சிறகைக் காய வைத்துவிட்டு பெண்கள் முகத்தை நோக்கி செல்லும். அது நிலா மேகத்தை நோக்கி செல்வதைப் போல இருக்கும்.

**2. குறிஞ்சி மணப்பதற்காக நிகழ்வுகளை குறிப்பிடுக.**

சந்தன மர குச்சி, அகில் ,நெல்லரிசி சோறு, காந்தள் மலர் ஆகியவற்றால் குறிஞ்சி மணக்கிறது.



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

# நாச்சியார் திருமொழி

### குறு வினா விடை

1.கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
கண்ணன் புகுந்த பந்தலில் முத்துமாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தது.

### சிறுவினா விடை

1.ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக
பெண்கள் கலசத்தையும் விளக்குகளையும் ஏந்தி வர கண்ணன் பாதுகை அணிந்து நடந்துவருகிறார். இசைக்கருவியும் சங்கு முழங்க முத்துடையபந்தலில் கண்ணன்வருகிறார்.

### புணர்ச்சி

1.புணர்ச்சி என்றால் என்ன?
நிலைமொழியும் வருமொழியும் சேருவது புணர்ச்சி.

2.கைபிடி, கைப்பிடி சொற்களின் பொருள் வேறுபாடுக ளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.
1.கைப்பிடி- இயல்பு புணர்ச்சி
2.கைப்பிடி -விகாரப்புணர்ச்சி

# திருக்குறள்

1.இறக்கும் வரை உள்ள நோய் எது?
சொன்னாலும் செய்யாமல் தானாகவும் செய்யாதவன் உயிர்.

2.உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?
உழவர் அனைவரையும் தாங்கி நிற்பவர் அவரே.

## இயல் – 7

### குறு வினா விடை

1. இந்திய தேசிய ராணுவத்தில் குறிப்பிடத்தகுந்த தமிழர்கள் யாவர்?

1.பசும்பொன் 2.முத்துராமலிங்க தேவர்

3.ஜானகி 4.ராஜாமணி

2.தாய் நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள் ஏன்?

ஆசிரியர் பணியைத் தேர்ந்தெடுப்பேன். காரணம் : நல்ல தலைவர்களை நாட்டிற்கு உருவாக்கித் தருவேன்.

3.’டெல்லி நோக்கிச் செல்லுங்கள்’ என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

1943இல் நேதாஜியால் செய்யப்பட்டது

### சிறு வினா விடை

1.குறிப்பு வரைக.” டோக்கியோ கேடட்ஸ்”

45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு வான்படை தாக்குதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட பயிற்சி பிரிவின் பெயர் டோக்கியோ கேடட்ஸ்.

2.பனியிலும் மழையிலும் எல்லை காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.

தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும் மறந்து தன் நாட்டையும் தன் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்காகவே உழைக்கும் நல்ல உள்ளங்கள் ராணுவ வீரர்கள் அவர்களைப் போற்றி வணங்குகின்றோம்.

## சீவகசிந்தாமணி

### குறு வினா விடை

1.கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக கூறப்பட்டுள்ளது?

நெற்பயிரின் தோற்றம்

2.ஐம்பெரும் காப்பியங்கள் யாவை?

1.சிலப்பதிகாரம் 2.மணிமேகலை 3.சீவக சிந்தாமணி 4.வளையாபதி 5.குண்டலகேசி

### சிறுவினா விடை

1.ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?

- உணவுகள்
- அறச்சாலைகள்
- ஒப்பனை மணிமாடம்
- கம்மியர் திருமணங்கள்

## இயல்– 8

## பெரியாரின் சிந்தனைகள்

### குறு வினா விடை

1.பகுத்தறிவு என்றால் என்ன?
அறிவியல் முறையில் அறிவின் வழி முடிவெடுப்பது பகுத்தறிவு ஆகும்.



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

2.பெரியார் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப் படுகிறார்?
வெண்தாடிவேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம்.

3.பெரியார் எவற்றையெல்லாம் எதிர்த்தார்?
இந்தித் திணிப்பு ,கள்ளுண்ணல், குலக்கல்வித்திட்டம்,குழந்தைத்திருமணம், தேவதாசி முறை, மணக்கொடை.

4.தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் என்று அழைக்கப்படுபவர் யார்?
தந்தை பெரியார். யுனெஸ்கோ வழங்கியது.

## சிறு வினா விடை

1.சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

விழாக்கள் , சடங்குகள் வேண்டாம். இன்று விழாவுக்கும் திருமணத்திற்கும் கடன் வாங்கி துன்பப்படுகின்றனர்.

## நெடு வினா விடை

1.மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.
இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ற நூல்களை தமிழில் எழுத வேண்டும்.
பகுத்தறிவு தன்மைகளை உண்டாக்க வேண்டும்.
ஐ என்பதை அய் எனவும், ஒள என்பதை அவ் எனவும் சீரமைத்தார்.

## யாப்பிலக்கணம்

1.அசை எத்தனை வகைப்படும்?

அசை நேரசை,நிரையசை என இருவகைப்படும்.

2.யாப்பின் உறுப்புகள் யாவை?

யாப்பின் உறுப்புகள் : 6. எழுத்து, அசை , சீர் , தளை , அடி , தொடை

3.ஈரசைச்சீருக்குரிய வாய்ப்பாடுகள் யாவை?

1.நேர் நேர் - தேமா 2.நிரை நேர் - புளிமா , 3.நேர் நிரை -கூவிளம் 4.நிரை நிரை - கருவிளம்

# விரிவானம்

## அகழாய்வுகள்

முன்னுரை

அகழாய்வுகள் குறித்த செய்திகளைக் காண்போம்

அகழாய்வுகள்.

- அரிக்கமேடு அகழாய்வில் முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- கீழடி அகழாய்வு சுடுமண் பொருட்கள் உலோகப் பொருட்கள் முத்துக்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

அகழாய்வுகள் மூலம் தமிழரின் பெருமையை அறியலாம்.

## இந்திய விண்வெளித்துறை

முன்னுரை

இந்திய விண்வெளித்துறையின்

சாதனைகளைக் காண்போம்.

இந்திய விண்வெளித்துறை

- இந்திய விண்வெளி ஆய்வு மையம் பெங்களூரில் உள்ளது.
- திரு.கே. சிவன் இதன் தலைவராக உள்ளார்.
- இதுவரை 40 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.
- 1.ஆரியபட்டா 2.ரோகினி 3.சந்திராயன் –1 ஆகியவை விண்ணில் ஏவப்பட்டது.

முடிவுரை

இந்திய விண்வெளித்துறை அளப்பற்ற சாதனைகளைச் செய்துள்ளது..



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

## வீட்டிற்கோர் புத்தகசாலை

நூலகம் நூல்கள்குறித்து அண்ணாவின் வானொலிஉரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

முன்னுரை

நூலகம் நூல்கள் குறித்து அண்ணா கூறியுள்ளவற்றைக் காண்போம்.

நூலகம்

சிறிய கடை அளவிற்கு உடைகளையும் மருந்துகளையும் வைத்துஇருக்கிறோம். ஆனால் நாம் நூலகத்தை வீட்டில் வைத்திருப்பதில்லை. வீட்டில் நூலகம் அமைக்க வேண்டும்

நூல்கள்

வரலாறு ,புவியியல், அறிவியல் கண்டுபிடிப்புகள்,அறிஞர்கள் ஆகியன நூல்கள் வீட்டு நூலகத்தில் வைக்கவேண்டும்.

முடிவுரை

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் வைக்க வேண்டும்.

### தாய்மைக்கு வறட்சி இல்லை

முன்னுரை

தாய்மை பற்றி இக்கதை விளக்குகிறது.

தாய்மை:

- ❖ நெடுஞ்சாலையில் தோட்டம் ஒன்று இருந்தது அங்கு குடிசையில் கணவன் ,மனைவி , இரண்டு குழந்தைகள், இரண்டு நாய்க்குட்டிகள் வாழ்ந்தனர்.
- ❖ ஒரு நாள் அதிகாரிகள் மீதி பிரியாணியும் முட்டையும் கொடுத்தனர்.
- ❖ மனைவிக்கு அது செயல் பிடிக்கவில்லை. இருந்தாலும் வறுமை காரணமாக குழந்தைகளுக்கு கொடுத்தாள். ,நாய் குட்டிகளுக்கு மீதி கொடுத்தாள்.

முடிவுரை

நாய்க்கும் உணவு தந்த தாய் சிறந்தவள்.

## கடிதம்,கட்டுரை,அறிக்கைகள்

### நூல் மதிப்புரை

நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக

நூலின்:பெரியாரின் பெண்ணிய கனவுகள்
நூலாசிரியர்: ச. சேட்டு மதார்ஷா
வெளியீடு : விஜயா பதிப்பகம், கோவை.

பெண்ணுரிமைக்காக பெரியார் சொன்ன கருத்துக்களை தனியே கூறும் சிறந்த நூல் இது. பெண்ணுரிமைக்காக பெரியார் கூறிய கருத்துகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அழகாக இந்நூல் காட்டுகிறது. பெரியாரின் பெண்ணிய கனவுகள் இன்று நனவாகிக் கொண்டுவருவதை நல்ல முறையில் இந்த நூல் எடுத்துக் கூறியுள்ளது. ஒருவரும் அவசியம் இந்த நூலைப் படிக்க வேண்டும்.

## வரவேற்பு மடல்

தமிழறிஞரே!

அன்பானவரே! அறிவானவரே! பண்பானவரே! சிறந்த தலைவரே! வருக! வருக!

நேர்மையானவரே!

உண்மைக்கும் உழைப்புக்கும் சான்றானவரே! நேர்மையின் மறு உருவமாக இருப்பவரே! வருக! வருக!

சிந்திக்க வைப்பவரே!

பேச்சால் சிரிக்க மட்டும் அல்ல. சிந்திக்க வைப்பவரே! வருக! வருக!

நாள் : இப்படிக்கு

இடம் : ஈரோடு இலக்கிய மன்ற செயலாளர்

### நண்பனுக்குக் கடிதம்

உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் கால் முளைத்த கதைகள் என்னும் நுல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக

24, தமிழ் நகர்,
ஈரோடு,
நாள்:

அன்புள்ள நண்பனுக்கு

உன் நண்பன் எழுதும் கடிதம். நலம் நலம் அறிய ஆவல். நீ அனுப்பிய பிறந்த நாள் வாழ்த்தும் பிறந்தநாள் பரிசாக புத்தகமும் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். நூலைப் படித்துப் பார்த்தேன். தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக கதைகள் ஒவ்வொன்றும் அமைந்திருந்தது. நீயும் அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார். மற்றவை நேரில்.

இப்படிக்கு
-----

உறைமேல் முகவரி

பெறுநர்
ரகு
10 பாரதி நகர்
மதுரை – 6.



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

| மதரஸா இஸ்லாமிய உயர்நிலைப்பள்ளி |
|---|
| உலகத் தாய்மொழி நாள் விழா |
| நாள் :21.2.20 நிகழ்விடம் : கலையரங்கம்<br><br>நிகழ்ச்சி நிரல்<br><br>தமிழ்த்தாய் வாழ்த்து<br>வரவேற்புரை : த.கண்ணன் 9—ஈ<br>தலைமையுரை : தலைமையாசிரியர்<br>சிறப்புரை : கவிஞர் வைரமுத்து அவர்கள்<br>நன்றியுரை : பாபு 10—அ<br>நாட்டுப்பண் |

## தொகுப்புரை எழுதுக

பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளை திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் இலக்கிய மன்ற விழா காலை 9 மணியளவில் தொடங்கியது. தலைமை ஆசிரியர் தலைமை ஏற்று தலைமை உரை வழங்கினார். அவர் தலைமை உரை வழங்கும் பொழுது மாணவர்கள் அனைவரும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையோடும் படிக்க வேண்டும் என்றார். ஒன்பதாம் வகுப்பு மாணவர் 'முயற்சி' என்னும் தலைப்பில் சிற்றுரை வழங்கினார். பேச்சுப்போட்டி —கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பத்தாம் வகுப்பு மாணவர் தமிழரசன் நன்றியுரை வழங்க நாட்டுப் பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## எங்கள் ஊர் சந்தை நாளிதழ் செய்தி:

### திங்கள்சந்தை

எங்கள் ஊர் திங்கள்சந்தை மிகவும் அருமையாக இருக்கும். இங்கு வண்ண வண்ண பூக்கள் – காய்கறிகள் – தானியங்கள்— பழங்கள் ஆகியவை விற்கப்படுகின்றன.பஞ்சுமிட்டாய்— கரும்புச்சாறு— பலாப்பழம் ஆகியவையும் விற்கப்படுகின்றன. கயிறு மீது நடக்கும் வித்தை காட்சியும் நடக்கும்.

### பொதுக்கட்டுரை

### மழைநீர் சேமிப்பு

முன்னுரை:

மழைநீர் சேமிப்பு பற்றியும், இதன் பயன்கள், சேகரிக்கும் முறை பற்றியும் இனிக் காண்போம்

மழைநீர் சேமிப்பு:

மேகம் மழை பொழிந்து நீரை நமக்குக் கொடுக்கிறது.அந்த நீரை நாம் சேமிக்க வேண்டும்.அதுவே மழைநீர் சேமிப்பு எனப்படும்.

சேமிக்கும் முறை:

1.வீட்டின் மீது விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் மழைநீர் சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கலாம்.
2.ஏரி , குளம் , கிணறு ஆகியவற்றில் மழைநீரைச் சேமிக்கலாம்.

பயன்கள்:

அ.குடிநீராகப் பயன்படும்.
ஆ.நிலத்தடி நீர் மட்டம் உயரும்.
இ.வறட்சி குறையும்.

மரம் வளர்ப்போம்:

1.மரத்தை வெட்டுவதால் மழை குறைகிறது.
2.எனவே, நாம் மரத்தை வெட்டக் கூடாது.
3.மழை அதிகமாக நாம் மரம் வளர்க்க வேண்டும்.
4.நாம் ஒவ்வொருவரும் வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்.

முடிவுரை:

அனைவரும் மழைநீரைச் சேமிப்போம்! அனைவரும் மரம் வளர்ப்போம்!



Please send your study materials to our email id - padasalai.net@gmail.com